# <u>செயற்குழுக் கூட்டம் (18-11-2023)</u>

இன்று (18 நவம்பர் 2023) நமது இயக்க மாதாந்திர செயற்குழுக் கூட்டம் நமது தலைமையகத்தில் நடைபெற்றது. சென்ற மாதம் நடந்த கூட்டத்தில், கோரம் (Quoram) இல்லாததால் நடைபெறவில்லை. பொது செயலாளர், ஐந்து செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் இரண்டு உறுப்பினர்கள் பார்வையாளர்களாகவும் கலந்து கொண்டனர். நமது சட்ட வழக்கறிஞர் திரு ந. சுப்ரமணியன் அவர்களும் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் தலைவர்/ உப தலைவர் கலந்து கொள்ளாததால் , பொது செயலாளர் A நஃபீஸ் அஹமத் அவர்களைத் தலைமை தாங்குமாறு கேட்டுக்கொண்டார், அந்த அழைப்பை ஏற்று திரு A நஃபீஸ் அஹமத் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். இன்று நடை பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இயக்கத்தின் 2023ம்ஆண்டு செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாத வரவு செலவு கணக்கு நிதிச் செயலாளரால் வாசிக்கப்பட்டது. வரவு செலவு கணக்கு சரிதானன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. இவ்வாண்டு திருச்சியில் 30-07-2023 அன்று நமது பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. பொதுக்கூட்ட நிகழ்ச்சிக்கு ஏற்பட்ட செலவான ரூ 14100/-க்கு, திருச்சி மாவட்டத் தலைவர் ரசீது அனுப்பியுள்ளனர். நமது விதிகளின்படி 50 % தொகையை தலைமையகம் ஏற்கிறது. எனவே ரூபாய் 7050/-ஐ திருச்சி மாவட்டத்துக்கு அனுப்ப இக்குழு முடிவெடுக்கிறது. இவ்வாண்டு பொதுக்குழுக்கூட்டத்தை சிறப்பாக நடத்தித் தந்த திருச்சி மாவட்டத் தலைவருக்கும், நிர்வாகிகளுக்கும், மற்ற உறுப்பினர்களுக்கும் இந்த செயற்குழு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறது

3, உறுப்பினர் சேர்க்கையின் போது மாவட்டங்கள் / கிளைகள் புதிய உறுப்பினர் கட்டணத்தை முழுமையாக தலைமையகத்துக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மாவட்டங்கள் / கிளைகளுக்கு உரிய பணம் அந்தந்த மாவட்டங்கள் / கிளைகளுக்கு திரும்ப **NEFT** மூலம் அனுப்பி வைக்கப்படும்.

4. **நீதிமன்ற வழக்குகளின் தற்போதைய நிலை**

நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்குகளின் தற்போதைய நிலை பற்றி விளக்கப்பட்டது. நீதிமன்ற வாய்தா கேட்கும் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டி ஒரு வடிவு மனுவை நமது செயலாளர் (சட்டம்) திரு A நஃபீஸ் அஹமத் அவர்கள் சமர்ப்பித்தார். அதைக் கொண்டு நமது சட்ட ஆலோசகர் மேற்கொண்டு முழுமையான கோரிக்கை மனுவைத் தயாரித்து பொதுசெயலாளர் கையெழுத்துடன் சட்ட கமிஷனுக்கு அனுப்பி வைக்கப்படும். வழக்குகள் குறித்த விவரங்கள் தனியாக அனுப்பி வைக்கப்படும்.

<u>இயக்கத்தின் நீதிமன்ற வழக்குகளின் தற்போதைய விவரங்கள்(18.11.2023)</u>

| | | |
|---|---|---|
| **1** | **W.P.No.3584 of 2018**: விதிமுறையற்ற கட்டிடங்களைக் காப்பாற்றும் அரசு உத்திரவை எதிர்த்து | அரசு வாய்தா கேட்டதால், அடுத்த நீதிமன்றக் கேட்டல் தேதி 08 -12-2023 |
| **2** | Crl.M.P.Sr.No.46425 of 2023 to implead in the Crl.R.C.No.1419 of 2023 பொன்முடியின் விகிதாரரமற்ற சொத்து வழக்கு | உயர் நீதிமன்றம் வழக்கைப் பதிவு செய்ய ஏற்கவில்லை. மனுவை ஏற்கத் திரும்பவும் கோரிக்கை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது |
| **3** | செந்தில் பாலாஜி வழக்கு | செந்தில் பாலஜியின் அடுத்த நிகழ்வுகள் கவனிக்கப்படுகிறன |
| **4** | தமிழக அரசு அதிகாரிகள் மீது மனறகொள்ளை வழக்கு | தகவல்கள் சேகரிக்கப்படுகிறது |
| **5** | சுடுகாட்டுக் கொட்டகை கட்டிய ஊழல்: அரசு அதிகாரிகளைக் காப்பற்றிய உயர் நீதிமன்றத்தின் மீது மறு முறையீடு | தகவல்கள் சேகரிக்கப்படுகிறது |

5. “அல்டிமேட் அஸோசியேட் ” நிறுவனம் நமது இயக்கத்தையும், நேர்மை நெறி இதழையும் பாராட்டி ரூ 35000/- நன்கொடை வழங்கியுள்ளனர். அந்த நிறுவனத்துக்கு நமது செயற்குழு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

6. நமது இயக்கத்தின் உறுப்பினராக கீழ்க்கண்ட 5 பேர் புதிதாக விண்ணப்பித்துள்ளனர்.

<u>ஆயுள் உறுப்பினர்</u>

- **திரு M . காமராஜ்**

<u>ஆண்டு உறுப்பினர்கள்</u>

- **திருமதி B சுகன்யா**
- **திரு R கார்த்திகேயன்**
- **திருமதி K புவனேஸ்வரி**
- **திரு K கமலஹாசன்**

எல்லா விண்ணபப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாழ்நாள்/ ஆண்டு உறுப்பினராகிறார்கள்.

7. நமது இயக்க ஆரம்ப நிறுவனர் திரு குப்புராஜ் அவர்களின் நூறாவது நினைவு தினம் டிசம்பர் 9ம் தேதி வருகிறது. அதைக் கொண்டாட அன்று மாலை நான்கு மணியளவில் மைலாப்புரிலுள்ள நியூ உட்லாண்ட்ஸ் ஹோட்டலில் அவரது மகள் திருமதி ஜெயந்தி ஆனந்தன் அவர்கள் அனைவருக்கும் நேரில் வந்து அழைப்பு விடுத்துள்ளார்கள். அதில் கலந்து கொள்ள விருப்பப் படுகிறவர்கள் நமது சட்டச் செயலாளர் திரு நஃபீஸ் அஹமத்திடம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்

8. இறுதியில் பொது செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிதே முடிவுற்றது.

| | |
|---|---|
| ஒப்பம் | ஒப்பம் |
| **A** நஃபீஸ் அஹமத்<br>**தலைவர்** | **வே கார்த்திகை ராஜன்**<br>**பொது செயலாளர்** |